**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C. No. 232-2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW 6 | Examined as : PW 6 | |
| Name | : கல்யாணசுந்தரம் | Defence | : |
| Father Name | : ஸ்ரீராமன் | Court | : |
| Village | : உதவி ஆய்வாளர், (ஓய்வு) | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 61/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 01.04.2026
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

6 எதிரி ஆஜர். 1 முதல் 5, 7, 8 எதிரிகள் ஆஜர் இல்லை. (U/s 355 BNSS Act ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:–**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து கடந்த 31.12.2025 அன்று ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 12.07.2023 தேதி 11.30 மணிக்கு நான் செம்பனார்கோவில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது கர்ணன் த/பெ. சாமிதுரை என்பவர் 11.07.2023 அன்று நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று காவல் நிலைய குற்ற எண்.284/2023, இதச பிரிவுகள் 147, 294(b), 352, 427, 506(ii) கீழ் வழக்கினை பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாலதி மற்றும் ராயர் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடத்தினை தயார் செய்தேன். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை தனித்தனியே பதிவு செய்தேன். பட்டியல் சாட்சிகளை விசாரணை செய்ததில் குற்ற சம்பவம்

உண்மை என தெரியவந்த நிலையில் எதிரிகளை தேடிய போது எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறையில் முன்பிணை பெற்றிருந்ததால் அவர்களை கைது செய்ய இயலவில்லை.

3. பின்னர் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து கடந்த 22.09.2023 அன்று இதச பிரிவுகள் 147, 294(b), 352, 427, 506(ii)ன் கீழ் இறுதியறிக்கையை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து நான் தான் புலன்விசாரணை செய்து இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அசா1 காவல் நிலையம் ஆஜராகி எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் 11.07.2023 அன்று இரவு கொடுத்தார். மேற்படி விரபம் முதல் தகவல்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. புகாரில் சம்பவ இடத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் கோவிலுக்கு அருகில் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார். சம்பவமானது எப்போது நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் 10.07.2023 அன்று மாலை 06.00 மணிக்கு பிறகு நடந்ததாக சொல்லியுள்ளார்.

2. புகாரில் சம்பவ தேதியானது இடையில் புகுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் ஆயுதங்களை காட்டி மிரட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 11.07.2023 அன்று புகார் பெற்றதற்கான மனு ரசீது கொடுத்தேனா என்றால் இல்லை. பொதுவாக புகார் கொடுக்கப்பட்டால் அதை விசாரித்து வழக்கு பதிவு செய்வேன். நான் இந்த வழக்கு புகாரை பெற்ற பிறகு விசாரணை செய்து வழக்கு பதிவு செய்தேனா என்றால் இல்லை. மறுநாள் இருதரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுவிட்டதால் நான் வழக்கு பதிவு செய்துவிட்டு விசாரணை செய்தேன்.

3. இவ்வழக்கின் குற்ற எண். 284/2023 ஆகும். இந்த வழக்கின் எதிரி கொடுத்த புகாருக்கான குற்ற எண். 283/2023 ஆகும். எதிரிகள் உடைத்ததாக சொல்லப்படும் பொருட்களை நான் கைபற்றினேனா என்றால் இல்லை. சேதப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான சேதார மதிப்பை எப்படி கணக்கீடு செய்தேன் என்றால் பொருட்களை பார்வையிட்டதில் அவை சிறிய அளவில் சேதாரம் ஏற்பட்டிருந்தால் அதற்கு ரூ. 200/- என மதிப்பிட்டேன். நான்

சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், பொருட்களை கைபற்றவில்லை என்றாலும், பொருட்களை நான் பார்க்காமல் சேத மதிப்பீட்டை நானாக போட்டுள்ளதால் அவை ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிகளிடமிருந்து எந்த ஆயுதமும் கைபற்றவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் தாயார் மற்றும் மனைவியை இந்த வழக்கில் விசாரித்து புகார் பெற்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கின் எதிரிகளும் புகார்தாரரும் என்ன என்ன பொறுப்பு வகித்து வந்தார்கள் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. புகார்தாரரின் வீட்டில் சம்பவ சமயத்தில் 50 நபர்கள் கூடி இருந்ததாக சொல்லும் நிலையில் அதில் 8 நபர்கள் மட்டுமே பொருட்களை சேதப்படுத்தியதாக சொல்வது ஏற்றதல்ல என்றால் சரியல்ல.

4. 1 முதல் 3, 6 முதல் 8 வரையிலான எதிரிகள் அந்த கிராமத்தில் முக்கிய பொறுப்பு வகித்தார்கள் என்றாலும், அவர்கள் மீது உள்ள காழ்புணர்ச்சியின் காரணமாகவும், 4வது எதிரியை அடித்தது சம்பந்தமாக அவர் புகார் கொடுத்தவிடுவார் என பயந்து அசா1 காவல் நிலையம் ஆஜராகி புகார் கொடுக்க வந்தார் என்றாலும், ஆனால் 4வது எதிரி கொடுத்த புகார் வாக்கமூலத்தின் அடிப்படையில் நிலையம் ஆஜரான அசா1ஐ நான் கைது செய்துவிட்டு, அசா1 டமிருந்து 11.07.2023 அன்று புகார் பெற்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா1 கொடுத்த புகாரானது இந்த வழக்கின் 4 எதிரி கொடுத்த புகாருக்கு எதிராக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

5. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் சொல்வது போல் எதிரிகள் எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும், எந்த பொருட்களையும் சேதப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் சம்பவ இடத்தில் வைத்த தயார் செய்யவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. அசா2 அசா1ன் மைத்துனர் என்றால் தற்போது நினைவில் இல்லை. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரினை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது இந்த இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.